DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

CC-25/2023

Prosecution witness – PW 6

| | | |
|---|---|---|
| Name | : திரு.முத்துக்குமார் | Caste: |
| Father's Name | : | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

(Accused present)

05.02.2026 – 04. 25 PM

முதல் விசாரணை:–

1. நான் கடலாடி குரூப்பில் கிராம உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சி 5 முனியசாமியை தெரியும், அவர் கடலாடி கிராம நிர்வாக அலுவலர் ஆவார். எதிரி சேவுகராஜை தெரியும்.

2. கடந்த 04.01.2023ம் தேதியன்று நான் கடலாடி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்த போது காலை 10.00 மணியளவில் கடலாடி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் என்னை அழைத்தன் பேரில் நானும், கிராம நிர்வாக அலுவலர் முனியசாமியும் அன்று காலை 10.15 மணியளவில் நெறிஞ்சிப்பட்டிக்கு சென்றோம். காலை 10.15 மணியளவில் போலீசார் எங்கள் முன்னிலையில் விசாரணை செய்த போது எதிரி தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்.

3. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் இந்த வழக்கு தொடர்புடைய நகை திருட்டு சம்பவத்தை ஒத்துக்கொண்டார். அதன் பேரில் அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள். போலீசார் பதிவு செய்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும், கிராம நிர்வாக அலுவலர் முனியசாமியும் கையொப்பம் செய்தோம்.

4. மேலும் இச்சம்பவத்தில் திருடப்பட்ட மீதமுள்ள நகை வங்கியில் வைத்திருப்பதாக சொன்னதன் பேரில் கமுதி, தமிழ்நாடு மெர்கண்டைல்

வங்கிக்கு காவல் ஆய்வாளருடன் நானும், கிராம நிர்வாக அலுவலர் முனியசாமியும் மீண்டும் நெறிஞ்சிப்பட்டிக்கு மதியம் 01.30 மணியளவில் வந்தோம். எதிரி அவருடைய வீட்டில் வைத்து ஆணியை பிடுங்கும் கம்பி, 1 இரும்பு ராடையும் எடுத்து ஆஜர் செய்ததை ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சி பிறப்பித்து கைப்பற்றினார்கள். அந்த அத்தாட்சியில் நானும், கிராம நிர்வாக அலுவலர் முனியசாமியும் கையொப்பம் செய்தோம். இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

இந்த எதிரியை நான் முதலில் எங்கு வைத்து பார்த்தேன் என்றால் எதிரியின் வீட்டில் வைத்து பார்த்தேன். அதற்கு பிறகு நான் எதிரியை காவல் நிலையத்தில் வைத்து பார்க்கவில்லை. நான் நெறிஞ்சிப்பட்டிக்கு சென்றபோது எதிரியின் வீட்டின் முன்பு எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சுமார் 4,5 நபர்கள் இருந்தார்கள். போலீசார் எந்த வாகனத்தில் எதிரியின் வீட்டிற்கு வந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. போலீசார் எந்த காவல் நிலையத்தை சேர்ந்தவர் என்றும், அவர்கள் பெயர்கள் என்ன என்றும் தெரியாது. கடலாடி காவல் நிலையத்தை சேர்ந்தவர்கள். எந்த போலீசார் இரும்பு கம்பியை என்னிடம்காட்டினார்கள் என்றால் எதிரி தான் வீட்டிலிருந்து எடுத்து வந்தார். அந்த கம்பியின் நீளம் மற்றும் எடை எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் அத்தாட்சியில் எவ்வாறு கம்பியின் அளவை எழுதினார்கள் என்று எனக்கு தெரியாது. அந்த இரும்புக்கம்பியின் நிறம் என்ன என்றால் எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் கையொப்பம் செய்த பேப்பரில் நகைகளை சம்மந்தமாக எழுதப்பட்டிருந்தது. வேறு எதுவும் இல்லை. நான் எத்தனை பேப்பரில் கையொப்பம் செய்தேன் என்றால் 2 பேப்பரில் கையொப்பம் செய்தேன் அந்த 2 பேப்பரிலும் நகைகளை சம்மந்தமாக எழுதப்பட்டிருந்தது. இந்த வழக்கு சம்பவத்திற்கு பின்னர் நான் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் சரிதான்.

அன்றைய தினத்திற்கு பின்னர் போலீசார் என்னை மீண்டும் விசாரணை செய்யவில்லை. நான் சொல்வது போல் சொன்ன இடத்தில் பொருட்களை எதையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.03.05 18:50:16 +0530